தமிழனுக்குக் குரு தமிழனாகத்தான் இருக்க வேண்டும், இருக்க முடியும்!



“... தமிழர்களுக்குத்
‘தங்களுடைய தாய்மொழியான
தமிழ்மொழிதான் அண்டபேரண்டமாளும்
பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியெனும்
இந்துமதத்தின் மெய்யான ஆட்சிமொழி’
என்ற பேருண்மை விளங்க
வேண்டும். ...”

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
## அவர்கள் அருளிய



# இந்து வேதம்



தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**சித்திரை மாத வெளியீடு (Apr 2015 - May 2015)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116**

# அருளுலக ஆட்சிமொழி
# தமிழ் மொழியே!

காணிக்கை ரூ.10/-

# <u>உள்ளுறை</u>

1. சூரிய காயந்திரி மந்தரம், மந்திரம்.

2. குருநிலையும் ஒன்பது கோள்நிலையும்.

3. ஆதிசங்கரர் அத்வைத வாதியா? அல்லது சித்தர்களின் சித்தாந்த வாதியா?

4. அருளுலக ஆட்சிமொழி.

5. இ.ம.இ. கொள்கை விளக்கப் பாடல்.

---

<u>தமிழினமே இவ்வுலகில் தோன்றிய முதல் இனம்</u>; தமிழ் மொழியே இவ்வுலகில் தோன்றிய முதல் மொழி; தமிழ் மொழியே சித்தர்களுடனும், பதினெட்டாம்படிக் கருப்புக்களுடனும், இவர்கள் கண்டுபிடித்த இறைவன், ஆண்டவன், தெய்வம், கடவுள், தேவர், அமரர், இருடி, கணம், ... எனப்படும் நாற்பத்தெட்டு வகைப்பட்ட இனங்களுடனும் தொடர்பு கொள்ளும் தகுதியுடைய மொழி; தமிழ்மொழியிலேயே முதன்முதல் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், ஆகமங்கள், பூசாவிதிகள், வேள்வி நியதிகள், தவ ஒழுக்கங்கள், ஓக வழிகள், மந்திறங்கள், சாத்திறங்கள், தோத்திறங்கள், நூல்கள், வாக்குகள் (எழுதாக் கிளவி) ... முதலியவையெல்லாம் உருவாக்கப் பட்டன.

**- *குருதேவர் எழுதிய 'தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூரார் கதை' என்ற நூலிலிருந்து***

சென்னை
1-12-85

# <u>சூரிய காயந்திரி மந்தரம்</u>

**சுர்ரெனும் சூரியே விரிசுடரே ஆரியா**
**பாசக் கரையா ஆன்ம வித்தே மகேசா**
**மகிழ் விதிக்கு அரையா தீயே நீயாகி**
**தன்னேடுவரு ஆதியந்தப் பிறச்சினை யற்றிடு**
**நாமாகுக! சுவையாகுக! பயனுகுக! காத்திடுக!**

அன்றுடம் ஆதவன் உதிக்கும் போது இதனைக் கூறிப் பூசைகளைச் செய்யுமாறு இக்குலத்தவரான காகபுசுண்டர் (காக்கையர்) கூறுகிறுர்.

பகற்காலத்துச் செய்யும் பூசைகளில் சூரியனைத் துணைக்கழைத்திட இந்தச் சூரிய காயந்திரி மந்தரம்தான் இந்து மதத்துக்கெனப் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புக்களாலும் வழங்கப்பட்டது.

வடஆரிய வேதமதப் பிருமணர்கள் தமிழர்களை ஏமாற்றுவதற்காக இதன் சுருக்கம் என்று ஒரு சமசுக்கிருதச் *சூரிய காயத்ரீ மந்திரத்தைச்* சூரிய வழிபாட்டிற்கு உண்டாக்கினுர்கள். அது:-

*பாஸ்கராய வித்மஹே*
*மஹத்விதி கராய தீ மஹி*
*தன்னோ ஆதித்ய ப்ரச்சோதயாத்*

இந்தச் *சூரிய காயத்ரீ மந்திரம்* தவறுனது, பயனற்றது. இந்தத் தவறுன **<u>மந்திரத்தால்</u>** பதினெண்சித்தர்கள் படைத்த சரியான, பயன்மிக்க, மெய்யான **<u>மந்தரம்</u>** செயலிழந்தது.

தமிழர்களை, அருளாற்றல் அற்றவர்களாக ஆக்கிடுவதற்காகப் பிறமண்ணினரான பிருமணர்கள் சூழ்ச்சியாகப் போலியான, பயனற்ற மந்திரங்களை உண்டாக்கினுர்கள். இச் சூழ்ச்சிகளை, ஏமாற்றுக்களைப்

பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எடுத்துக் கூறியும் தமிழர்கள் திருந்தவில்லை. தொடர்ந்து தமிழர்கள் பிருமண அடிமைகளாக, கருத்துக் குருடர்களாக இருக்கிறார்கள்.

இவற்றால்தான், **'மெய்யான இந்துமதம்'** காக்கும் பணிக்காக 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' தோற்றுவிக்கப்பட்டது. பிருமணர்களையும், சமசுக்கிருத மொழியையும் எதிர்த்தழித்துத்தான் தமிழர்களையும், தமிழ்மொழியையும், இந்துமதத்தையும் காப்பாற்ற வேண்டும்.

பிருமணர்களும் திருந்தித் தமிழிலுள்ள சூரிய காயந்திரி மந்திரம், மந்திறம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம் எனும் ஐந்தினையும் பயன்படுத்தி உய்வடைய வேண்டுமென்பதே இ.ம.இ.யின் கொள்கை. இந்த இயக்கம் கண்மூடித்தனமாக பிருமண வெறுப்பையோ! சமசுக்கிருத மறுப்பையோ! வளர்க்கவில்லை. இனியும், தமிழ்மொழியிலுள்ள அரிய, சீரிய, பெரிய, ... அருளூறு பூசாமொழி வாசகங்களையும், வாக்கியங்களையும், வாக்குகளையும் உலக மக்கள் பயன்படுத்தி உய்வடைவதைப் *'பிருமணரின் பொய்யான ஹிந்துமதம்'* தடுப்பதை அநுமதிக்க முடியாது! கூடாது! தமிழினமே நீ விழிச்சி பெறு! எழிச்சி பெறு! கிளர்ச்சி செய்! வளவளர்ச்சி முயற்சியில் ஈடுபடு! மலர்ச்சிமிகு செழிச்சியை உருவாக்கிடு! உருவாக்கிடு! உருவாக்கிடு!

இவற்றை உணர்ந்து தமிழினம் பிருமண அடிமையாகாமல்

"தமிழ்மொழிச் செழிச்சியே இந்துமதச் செழிச்சி",
"தமிழின எழிச்சியே இந்துமத எழிச்சி",
"தமிழக எழிச்சியே இந்துமத எழிச்சி",
"தமிழுணர்வு விழிச்சியே இந்துமத விழிச்சி",
"தமிழ்ப் பண்பாட்டுணர்வு விழிச்சியே இந்துமத விழிச்சி",
"தமிழ்ச் சமுதாய ஒற்றுமைச் செழுச்சியே இந்துமதச் செழுச்சி",
"தமிழின நாகரிக விடுதலை மலர்ச்சியே இந்துமத ஆன்மநேய ஒருமைப்பாட்டுத் தத்துவ மலர்ச்சி"

... என்ற உண்மைகளை உணர்ந்து துணிந்து பிருமணரின் *பொய்யான ஹிந்துமதத்தைக்* கண்டித்துத் திருத்த வேண்டும்! திருத்திட முன்வர வேண்டும்!

*பொய்யான ஹிந்துமதத்தை* விமர்சித்துத்தான் **மெய்யான இந்துமத**த்தைக் காப்பாற்ற வேண்டும். உலகெங்கும் தமிழன் இழிவை, நலிவை, அழிவைப் பெறுவதைத் தடுக்க வேண்டுமானால்; தமிழினம் **மெய்யான இந்துமத**த்தின் மூலம் ஒற்றுமையும், கட்டுக்கோப்பும், பற்றும், பாசமும் ... மிகுந்த புதிய சமுதாய நிலையைப் பெற்றேயாக வேண்டும். இதற்கு இ.ம.இ.தான் வழி! வழித்துணை! வழிகாட்டி!

**[கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை எழுதியவையிலிருந்து]**

---

# சூரிய காயந்திரி மந்திரம்

**தத்துவ வித்தே சூரியே சத்தாகிச் சித்தாகிச் சிவமாகிடுக!**
**எத்தகையாரும் பத்தியால் முத்தியுறத் தழைத்து எழுநீ!**
**காத்திடுக! சுவையாகிடுக! நலமாகிடுக! நாமேயாகிடுக!**
**அத்தனையையும் விழிச்சியாக்கிடுக! எழுச்சியாக்கிடுக!**
**செழுச்சியாக்கிடுக!**
**ஆஊஓம்! ஆஊஓம்! ஆஊஓம்! ஆஊஓம்! ஆஊஓம்!**

இதுவே சித்தர் காகபுசுண்டர் ஓதிய சூரிய காயந்திரி மந்திரம்

**- குருபாரம்பரியம்.**

[குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம் இதனையே கூறுகின்றன.]

“இந்துமதத்தை விளங்கிக் கொள்ளும் விதத்தைப் பொறுத்துத்தான்; அவை தரும் விளக்கங்களும், பயிற்சி முயற்சிகளும், தேர்ச்சி

முதிர்ச்சிகளும், பிற செயல்களும் அமையும். எனவே, பதினெண்சித்தர்களின் போதனைகளையும், சாதனைகளையும் புரிய முற்படுக! அதுவே இந்து மறுமலர்ச்சி இயக்கம்.”

**- சித்தர் ஏளனம்பட்டியார்**

நகல் எழுதியது:-

அன்பு / தலைமைப் பணியாளர், சித்தர் மகன், சித்தரடியார், சித்தர் பதிலி, தெய்வீகாச்சாரியார், ஈசுவரர், சோ.இரவீந்திரன், 4/12/85

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

---

# மனித இனத்தின் முதல்மொழி

திராவிட மொழிகள் என்று சொல்லப்படுகின்ற தென் இந்திய மொழிகளுக்கும், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மொழிகளுக்கும், சீன மொழி, கிரேக்க மொழி, இலத்தின் மொழி, இப்புரூ மொழி, பாரசீக மொழி, ..... முதலிய இன்னோரன்ன பிற தொன்மையான மொழிகளுக்கெல்லாம் ‘எழுத்து வடிவத்தையும்’ (Alphabetical Formations), எண்ணற்ற சொற்களையும் (Words) வழங்கிய “மனித இனத்தின் முதல்மொழியான” (The First Language of the Mankind) தமிழ்மொழியின் உண்மையான, முறையான, முழுமையான மொழி வரலாறும் (The History of the Language), இலக்கிய வரலாறும் (The History of the Literature) பதினெண்சித்தர்களின் நூல்களில்தான் இருக்கின்றன.

***- குருதேவர் எழுதிய ‘தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூரார் கதை’ என்ற நூலிலிருந்து***

# குருநிலையும் ஒன்பது கோள்நிலையும்

1. **'விண்ணியல்'** [The Universe = அண்ட பேரண்டம் => எல்லையற்றுப் பரந்து கிடக்கும் ஒன்று] என்பது; (108) நூற்றெட்டுத் திருப்பதி அண்டங்களையும், (243) இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி அண்டங்களையும், (1008) ஆயிரத்தெட்டுச் சீவ (சிவ) அண்டங்களையும், இவை மிதக்கும் பெருவெளிப் பரப்பையும்; உயிரணுப் பெருங்கடல் சூழ்ந்த [108 + 243 + 1008 = 1359] ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது அண்டங்களின் இயக்கம், பயிரின உயிரின நிலைகள்.... முதலியவைகளை விளக்கும் விஞ்ஞானமாகும் [The Cosmic Science].

2. **'வானியல்'** [The World = உலகம்] என்பது; இந்த உலகம், இந்த உலகின் இயக்கம், இயக்கத்தின் மூலங்களான இருபத்தேழு விண்மீன்கள் [The Twenty Seven Stars], பன்னிரண்டு இராசிகள் [The Twelve Zodiacs], ஒன்பது கோள்கள் [The Nine Planets] ஆகிய நாற்பத்தெட்டின் இயக்க நிலைகள், ஆற்றல் நிலைகள், ... முதலியவைகளை விளக்கும் விஞ்ஞானமாகும் [The Astronomy].

3. **'ஐந்தரம்', 'ஐந்திரம்', 'ஐந்திறம்'** எனும் மூன்று வகையான நுட்பமான விஞ்ஞானங்கள் விண்ணியலும் [The Cosmic Science], வானியலும் [The Astronomy] பற்றி விளக்குகின்றன. இவைதான், பதினெண் சித்தர்களின் மிக மிக நுட்ப திட்ப ஒட்பப் பகுத்தறிவுப் போக்குகளுக்கும், அறிவியல் சாதனைகளுக்கும், விஞ்ஞானக் கொள்கைகளுக்கும் சான்றாகின்றன, ஊன்றாகின்றன. இவற்றின் அடிப்படையில்தான் **'மெய்யான இந்துமதம்'** உருவாக்கப் பட்டுள்ளது.

ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் மேற்படி மூன்றையும் சேர்த்துச் சுருக்கமான ஓர் அமைப்பைத் தங்களுக்குத் தெரிந்த சித்தர்கள் [48 வகையினர்] மூலம் உருவாக்கித் தரப் பெற்றிட்டனர். அதுவே, **'பஞ்சாங்கம்'** எனப்படும். இதனடிப்படையில் பயனற்ற சடங்குகள், சாத்திறங்கள், சம்பிறதாயங்கள், புராண இதிகாசங்கள் .... முதலியவைகளை உருவாக்கி **மெய்யான இந்து மதத்தை**ச் சிதைவும், சீரழிவும், மெலிவும், நலிவும், முடக்கமும், தேக்கமும் .... அடையச் செய்திட்டனர்.

குறிப்பு:-

a) இந்த 'விண்ணியல்', 'வானியல்' பேருண்மைகள்தான் இப்போது **மெய்யான இந்துமதத்தை** பிருமணரின் கற்பனையான, பயனற்ற ***பொய்யான ஹிந்து மதத்தி***லிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

b) பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதம்** அண்டபேரண்டம் முழுதும் பரவிய; ஆட்சி பெற்றுள்ள ஒன்று என்ற பேருண்மை மேற்படி மூன்று விஞ்ஞானங்களால் விளங்குகின்றன.

4. வானிலுள்ள ஒன்பது கோள்களும்தான் இம்மண்ணிலுள்ள பயிரினங்களையும், உயிரினங்களையும் [The Flora and the Fauna] நேரடியாக ஆளுகின்றன.

அதாவது

1) ஞாயிறு [சூரியன் - Sun],
2) திங்கள் [சந்திரன் - Moon or Lunar],
3) செவ்வாய் [அங்காரகன் - Mars],
4) புதன் [Mercury],
5) வியாழன் [குரு - Jupiter],
6) வெள்ளி [சுக்கிரன் - Venus],
7) சனி [Saturn],
8) இராகு [Dragon's Tail],
9) கேது [Dragon's Head]

எனும் ஒன்பது கோள்களும் உணவுத் தானியங்கள் [The Food Grains], பருப்புகள் [Pulses and Nuts], எண்ணெய் வித்துக்கள் [Oil Seeds], நவரத்தினங்கள் [Gems], ... முதலிய அனைத்துக்கும் காரணமாக, இயக்கச் சத்தியாக இருக்கின்றன.

இன்னும் சொல்லப் போனால், மழை, காற்று, நிலநடுக்கம், நெருப்பால் அழிவு, போர், தலைவர்கள் சாவு, தனிமனிதர் நோய்நிலை, ஓகநிலை .... முதலிய அனைத்துக்குமே இந்த ஒன்பது கோள்களின் நிலைகளும் இயக்கங்களுமே காரணமாகும். [The positions and the Movements of the Nine Planets are the main sources and controlling forces of each and everything in this World.]

எனவேதான் நல்ல நேரம் [Good time or Favourable and auspicious time], கெட்ட நேரம் [Bad Time] என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளிலும் பல வகையான பகுப்புக்களை உண்டாக்கினார்கள் பதினெண்சித்தர்கள். **இது பகுத்தறிவுக்கும் விஞ்ஞானத்துக்கும் ஏற்றதுதான்.**

இதேபோலத்தான் மேற்படி ஒன்பது கோள்களையும் அடிப்படையாகக் கொண்டு பிறப்பியல் [சாதகம் - Horoscope], வரியியல் [கைரேகை - Palmistry], எண்ணியல் [Numerology], பெயரியல் [Nameology], மனையியல் [A Structural Study of the Buildings], அங்கவியல் [A physiological study] .... முதலிய பலவகை அறிவியல்களை விஞ்ஞானங்களாகத் தோற்றுவித்து வளர்த்திட்டார்கள் பதினெண்சித்தர்கள்.

("The Pathinensiddhars invented the facts about the rule and power of the Nine Planets. And basing those facts they founded different kinds and varieties of Sciences for the welfare and uplift of the human life ....." / *taken from the writings of His Holiness Siddhar Kaakkaiyar Mr M.Palanisamy Pillai, the 2nd President of the Indu Marumalarchy Iyakkam*).

இப்படி ஒன்பது கோள்கள் பற்றிய பேருண்மைகளின் அடிப்படையில் தோற்றுவித்து வளர்த்திட்ட விஞ்ஞானங்கள் அனைத்தையுமே மனிதவாழ்வின் மேம்பாட்டுக்கும் உயர்வுக்கும் செம்மைக்கும் உதவும் வண்ணமாகத்தான் படைத்தார்கள். இதுதான் இவர்களின் சிறப்பு. இச்சிறப்பினால்தான் இவர்கள் வழங்கிய **'இந்துமதம்' எனும் 'சித்தர் நெறி'** உலகம் முழுவதும் பரவி நல்லாட்சி நடத்தும் ஒன்றாயிற்று. இன்னும் கூடப் பதினெண்சித்தர்களின் இந்துமதம் ஒரு சமூக விஞ்ஞானமாகவே வாழுகின்றது.

("The Siddha Philosophy of the Pathinensiddhars, namely The INDUISM attained a world-wide popularity, prominence and prosperity only because of its rationalistic approach and scientific attitude and atmosphere. So much so, even today The INDUISM lives and gets respect as a Social Science ....." / *taken from the writings of His Holiness Siddhar Kaakkaiyar, Mr M.Palanisamy Pillai, the 2nd President of the I.M.I.*).

எனவேதான், இன்றைக்கு **மெய்யான இந்துமதத்தில்** உள்ள விஞ்ஞானப் பேருண்மைகள் விளக்கி யுரைக்கப்படுகின்றன. இன்றைய இ.ம.இ.யின் தலைவர், குருதேவர், அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார், குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர் இவரது தந்தையாரால் முழுக்க முழுக்க கணிதமும், விஞ்ஞானங்களும் ஆங்கிலேயர்களின் சூழலில் இளங்கலைப் பட்டம் வரை படிக்க வைக்கப் பட்டார். பிறகுதான் தாய்மொழிப் புலமைக்காக முதுகலையும் (M.A.), பண்டாரகர் (Ph.D.) பட்டத்துக்குரிய ஆய்வுப் படிப்பும் (Research Scholar U.G.C.) பெறுமாறு செய்யப்பட்டார்.

தமிழின இயக்கங்களும், தமிழ்நாட்டுச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கியக் கழகங்களும், தலைவர்களும் பெரும்பாலும் உண்மையான தமிழ் உணர்வும், பற்றும், பாசமும், பிடிப்பும் இல்லாத சந்தர்ப்பவாதப் போக்கையும், தன்னலப் போக்கையுமே கொண்டிருக்கிறார்கள். எனவேதான், இவர் எண்ணற்ற ஆண்டுகளாக எடுத்துக் கூறியும், எழுதியும் வருகின்ற தமிழினம் பற்றிய அரிய, பெரிய, பயன்மிகு பேருண்மைகள் உரிய பயனை நல்க முடியவில்லை.

இவற்றையெல்லாம் எண்ணியே, இவர் இ.ம.இயக்கத்தையும், அதன் கீழுள்ள பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நிறுவனங்களையும் புதிய வலிமையும் வளமும் பெறச் செய்ய செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உலக மூலமதமும், முதல்மதமும், தாய்மதமும், அண்டபேரண்டமாளும் மதமுமான மெய்யான இந்துமதத்தின் மூலவர்களான தமிழர்கள் => திராவிடர்கள் => இந்தியர்கள் ... இன்றைக்கு இந்துமதத்தைக் காப்பாற்ற முன்வராமல் இந்துமதத்தை இழித்தும், பழித்தும், எதிர்த்தும், வெறுத்தும், மறுத்தும், பகைத்தும், ... செயல்படுகிறார்கள்.

இதனால்தான், இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் (“The Tamils are the aboriginates of the India and they are the first mankind on this hemisphere ...” / *taken from the writings of His Holiness Siddhar Kaakkaiyar Mr M.Palanisamy Pillai, the 2nd President of the I.M.I.*) தன்னம்பிக்கையோ, தன்மான உணர்வோ, மொழியுணர்வோ, இன ஒற்றுமையோ, பண்பாட்டு ஒருமைப்பாடோ பெற முடியாமல் அடிமைப்பட்டும், மிடிமைப்பட்டும் அல்லலுற்று அனாதைகள் போல் வாழுகிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் முடிவுகட்டி இந்துமதத்தின் மூலம் தமிழகத்துக்கும், தென்னாட்டுக்கும், உலகத்துக்கும் படிப்படியாக நன்மைகளை உருவாக்கவே பகுத்தறிவுப் போக்கிலும், விஞ்ஞானச் சூழலிலும் வளர்க்கப்பட்ட மெய்யான இந்துமதத்தின் அடிப்படைகளான

வானியலும், விண்ணியலும், இவை சார்ந்த கலைகளும் விளக்கப்படும் பணி துவக்கப்பட்டுள்ளது.

5. **ஒன்பது கோள்களில் சுக்கிராச்சாரியார், வியாழ பகவான் எனப்படும் இருவரே குருநிலை பெற்றவர்கள். இராகுவும், கேதுவும் தேவன் என்ற சிறப்பைப் பெற்றவர்கள். திங்களங் கிழவன், செவ்வாய்க் கிழவன், புதன் கிழவன் என்று மூவர் உரிமைப் பட்டம் பெற்றவர். சனீசுவரன் என்ற இவன் ஈசுவரப் பட்டம் பெற்றவன். சூரியன் அனைத்துப் பட்டங்களுக்கும் அப்பாற்பட்டவன்.** இந்தப் பட்டங்களுக்கேற்பவே இவர்களுடைய ஆற்றல் நிலை, ஆட்சி நிலை, பயன், இயக்கம், ... முதலியவை கண்டுபிடிக்கப் படுகின்றன.

இவற்றை இங்கு குறிப்பதற்குக் காரணமென்ன வென்றால் (60) அறுபது ஆண்டுகளின் தமிழ்ப் பெயர்களைப் பிருமணர்கள் சமசுக்கிருதத்தில் மாற்றினார்கள்; மாதங்களின் பெயர்களையும், நாட்களின் பெயர்களையும் கூடச் சமசுக்கிருத மொழிப்படி திருத்தியும் மாற்றியும் செயல்பட்டிட்டார்கள். அதனால், பல அரிய பெரிய பொருளாழமிக்க அழகான தமிழ்ச் சொற்கள் மறக்கடிக்கப் பட்டன, மறைக்கப் பட்டன.

எனவே, வானியலிலும், விண்ணியலிலும், இவை சார்ந்த கலைகளிலும் மிகப் பெரிய இழப்புக்கள், அழிவுகள், நலிவுகள், திசை திருப்பல்கள், மயக்கங்கள், குழப்பங்கள், தவறுகள், தேக்கங்கள், ... விளைந்திட்டன. இந்தக் கேடுகளால், பதினெண்சித்தர்கள் அருளிய **மெய்யான இந்துமதம்** சிதைந்து சீரழிந்து பயன் குன்றிச் செல்வாக்கிழந்தது; அதே நேரத்தில் பிருமணர்களின் *பயனற்ற பொய்யான ஹிந்துமதம்* செழித்து வளர்ந்தது. எனவேதான், சமசுக்கிருத மொழியையும், பிருமணரின் கருத்துக்களையும் கடுமையாக எதிர்க்க வேண்டிய கட்டாயமும் அவசியமும் ஏற்பட்டு விட்டது.

பிருமணர்களும் சேர்ந்தே *பொய்யான ஹிந்துமதத்*தால் பாதிப்பும், பயனின்மையும், ஏமாற்றமும், கேடும் அடைகிறுர்கள். எனவேதான், *பொய்யான ஹிந்துமதத்தை* அகற்றும் பணியும், **மெய்யான இந்துமதத்தை** வளர்க்கும் பணியும் சேர்ந்தே நிகழ்த்தப் படுகின்றன. இதைப் புரியாதவர்கள், சித்தர்நெறியானது பிருமண வெறுப்பையும், சமசுக்கிருத மறுப்பையும் கண்மூடித்தனமாக வளர்ப்பதாகக் குறைகூறிக் குற்றம் சாட்டுகிறுர்கள்.

6. பிருமணர்கள் செய்த மிகப் பெரிய சதிகளில், சூழ்ச்சிகளில், தவறுகளில், புரட்டுக்களில், குழப்பங்களில் மிகப் பெரியது **ஆண்டின் பிறப்பு தை மாதமாக இருந்ததை மாற்றியதும்; வாரத்தின் ஏழு நாட்களின் வரிசையை மாற்றியதும், நாள் கோள் மீன் மாதம் ஆண்டு முதலியவைகளின் பெயர்களே மாற்றியதுமேயாகும்.** விரிவஞ்சி இவை பற்றி அதிகமாக இதில் எழுதவில்லே.

7. வியாழ பகவான் எனப்படும் தேவகுருவையே வாரத்தின் ஆரம்பமாகவும்; சுக்கிராச்சாரியார் எனப்படும் வெள்ளியையே வாரத்தின் கடைசியாகவும் கொண்டுதான் வாரத்தின் ஏழு நாட்களே வரிசைப் படுத்திஞர்கள் பதினெண்சித்தர்கள். அதாவது, **மெய்யான இந்துமத**ப்படி வாரத்தின் ஏழு நாட்கள்

1) வியாழன் - தேவகுரு, வியாழ பகவான் (Jupiter),
2) சனி - சனீசுவரன் (Saturn),
3) சூரியன் - ஞாயிறு (Sun),
4) புதன் - புதனங் கிழவன் (Mercury),
5) செவ்வாய் - செவ்வாய்க் கிழவன் (Mars),
6) திங்கள் - திங்களங் கிழவன் (Moon),
7) வெள்ளி - சுக்கிராச்சாரியார் (Venus),

என்றிப்படித்தான் வாரத்தின் ஏழுநாட்கள் கணிக்கப் பட்டுக் கணக்கிடப்பட்டு வழக்காற்றில் இருந்திருக்கின்றன. இந்த வரிசைதான் மனிதனுடைய உள்ளங்கை அமைப்பை விளக்கும் **வரியியல்** (The




Palmistry) என்ற விஞ்ஞானத்தில் உள்ளது. அதாவது கைரேகைப் பதிவு இலக்கணமும் விஞ்ஞானமும் இப்படியே உள்ளன.

8. மேற்படி வரியியல் விஞ்ஞான விளக்கத்தின் மூலம் பதினெண் சித்தர்களின் **மெய்யான இந்துமதம்** வாரத்தின் ஏழுநாட்களைத் தேவகுருவில் 'வியாழக் கிழமை' ஆரம்பித்து அசுரகுருவில் 'வெள்ளிக் கிழமை' முடித்திருக்கும் பேருண்மையை அனைத்துத் துறையினரும் மதத்தினரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! ஆராய்ச்சி செய்ய வேண்டும்! இந்தக் குழப்படியால், திருத்தத்தால் பிரமணர் அடைந்த நன்மைகள் என்னென்ன? எவையெவை? எப்படி யெப்படி? .... ??? ... என்று முறையாகவும் முழுமையாகவும் ஆராய்ந்தால்தான்; பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியான '**மெய்யான இந்துமதம்**' எப்படி யெப்படிச் சிதைத்துச் சீரழிக்கப் பட்டுப் ***பிருமணரின் பொய்யான ஹிந்துமதம்*** செழித்து வளர்க்கப் பட்டது என்ற பேருண்மை விளங்கிடும்.

9. வாரத்தின் ஏழு நாட்களும் குருவையே முதலாகவும் முடிவாகவும் பெற்றிடுமாறு அமைக்கப் பட்டதற்குத் தத்துவ விளக்கமும், சித்தாந்த விளக்கமும் விஞ்ஞானப் பூர்வமாக உண்டு. எனவேதான், பதினெண்சித்தர்கள் தங்களின் **மெய்யான இந்துமத**த்தில்;

"அனைத்தும் குருவழிக் காண்க",

"குருவில்லா வித்தை பாழ்",

"குருவே திரு"; "குருவும் திருவுமே கருவாவர்",

"குருவைப் பெற்றுல் திருவைப் பெற்றிடலாம்",

... என்று அனைத்துக்கும் குருவையே மூலமாக, முதலாக, உள்ளீடாக, உயிராக, உறுதுணையாக .... அமைத்துள்ளார்கள்.

10. ஒன்பது கோள்களிலும் வியாழனும் வெள்ளியும் என்ன நிலையில் உள்ளனர் என்பதைக் கணித்து விட்டால் போதும், மற்றவைகளைக் கணித்திடலாம் எளிதாக.

11. வியாழனுக்கும் வெள்ளிக்கும் பூசைகள் செய்து பத்தி, சத்தி, சித்தி.... அடைந்திட்டால் மற்ற ஏழுபேரையும் துணையாகப் பெற்றுச் சிறக்க வாழ்ந்திடலாம்.

12. குருநிலையே ஒன்பது கோள்களின் இயக்கங்களையும், பயன்களையும் நிர்ணயிக்கும். இந்த இருவருக்கும் உரிய பூசாவிதிகள், அருளூறு பூசாமொழிகள்... ஏராளம்! ஏராளம்! ஏராளம்! ஆனால், தக்க குருவின் வழியாகத்தான் இருவரையும் வணங்க வேண்டும். அதாவது, குருவே இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கியருளி உதவினால்தான் மேற்படி வியாழனையும் வெள்ளியையும் சித்தி செய்து கொள்ள முடியும்.

**மற்றவை குருவழிக் காண்க!**

**குவலய குருபீடம்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்**
**12/3/86**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் பிச்சைமணி அவர்களின் கையெழுத்திலும், சித்தரடியார் இளந்துறவி சுந்தரானந்தா அவர்களின் கையெழுத்திலுமாக ஒரே நகலில் இருந்தது.//**

---

**மெய்யான இந்துமதமும் பொய்யான ஹிந்துமதமும்**

**கேள்வியும் நானே! பதிலும் நானே!**

# ஆதிசங்கரர் அத்வைதவாதியா? அல்லது சித்தர்களின் சித்தாந்தவாதியா?

**கேள்வி:-** ஆதிசங்கரர் அத்வைத வாதியா? அல்லது சித்தர்களின் சித்தாந்த வாதியா? ஏனெனில், அனைத்தும் மாயை என்று கூறிய அவர் மாந்தரீக சக்கரங்களையும், தாந்தரீகப் பூசாவிதிகளையும், வேதப் பாராயணங்களையும் நம்பியே வாழ்ந்திருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் 'அகப் பிறமம்', 'தானே கடவுள்'. 'ஒவ்வொருவரும் தமக்குள் பரமாத்மா இருப்பதையும், பரமாத்மாவுக்குள் தானிருப்பதையும் உணர வேண்டும்' என்று கூறிய அவர் கன்னியாகுமரி முனையிலிருந்து இமயமலை வரையிலுள்ள பெரும்பாலான கோயில்கள் அனைத்துக்கும் சென்று பூசைகள் செய்திருக்கிறார். அவருடைய வாரிசுகள் என்று கூறிக் கொள்ளும் சங்கராச்சாரியார்கள் அனைவருமே உருவ வழிபாடு செய்பவர்களாகவும், மாந்தரீகத் தாந்தரீகப் பூசைக்காரர்களாகவும்தான் இருக்கிறார்கள். இந்த மாபெரும் முரண்பாடுகளுக்கும், மயக்கங்களுக்கும், குழப்பங்களுக்கும் விளக்கம் தேவை?

**பதில்:-**

1) நாம் ஆதிசங்கராச்சாரியாருக்காக ஒரு மலர் வெளியிடுகிறோம் என்றால் **மெய்யான இந்துமதத்திற்கும்**, *பொய்யான ஹிந்துமதத்திற்கும்*

இடையே மிகத் தெளிவான வேறுபாடுகளையும், அடிப்படைப் பேருண்மைகளையும், வரலாற்று நுட்பங்களையும் விளக்குவதற்கு ஆதிசங்கராச்சாரியாரின் வரலாறு மிக மிகச் சிறப்பாகப் பயன்படும் என்பதேயாகும்.

2) சங்கராச்சாரியார், ஆதிசங்கராச்சாரியார், சிவாச்சாரியார், ஆதிசிவாச்சாரியார், பரமாச்சாரியார், ஆதிபரமாச்சாரியார், ஈசுவராச்சாரியார், ஆதிஈசுவராச்சாரியார் என்று எட்டுவகை ஆச்சாரியார்கள் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்று வழிபடும் கொள்கைக்கு உரியவர்களாக **மெய்யான இந்துமதத்தில்** அறிவிக்கப் பட்டுள்ளார்கள். இதன்படி, மேற்குறிப்பிட்ட எட்டுவகை ஆச்சாரியார்களும் இவ்வுலகின் அனாதிக்காலம், ஆதிக்காலம், பாதிக்காலம், மீதிக்காலம் எனப்படும் நான்கு யுகங்களிலும் எண்ணற்றுத் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள்.

3) ஆச்சாரியார் சிவனை மட்டும் வழிபட்டால் சங்கராச்சாரியார், சிவாச்சாரியார், ஈசுவராச்சாரியார், பரமாச்சாரியார் என்று குறிக்கப் படுவார். அதே நேரத்தில் சத்தியையும், சிவனையும் (அம்மையப்பன்) சேர்த்து வழிபடக் கூடிய ஆச்சாரியார் ஆதிசங்கராச்சாரியார், ஆதிசிவாச்சாரியார், ஆதிபரமாச்சாரியார், ஆதிஈசுவராச்சாரியார் என்று குறிக்கப் படுவார். இங்கு ஆதி என்ற சொல் சத்தி வழிபாட்டினைக் குறிக்கிறது. (ஆதிசிவன், ஆதித் திருமால், ஆதி இந்திரன், ஆதி குபேரன், ... என்ற சொற்கள் மனைவியோடு வாழ்ந்த சிவன், ஈசுவரன், பிறமண், சங்கரன், பெருமால், திருமால், இந்திரன், குபேரன், ... முதலியவர்களை மட்டும் குறிப்பதாகக் குருபாரம்பரியச் செய்தி உள்ளது.)

4) இந்தக் கலியுகத்தில் பல சங்கராச்சாரியார்கள் தோன்றியிருக்கிறார்கள். ஆனால், வடஆரியர்கள் அனைத்துச் சங்கராச்சாரியார்களையும் ஒரே சங்கராச்சாரியாராக ஆக்கி விட்டார்கள். இது ஒரு மாபெரும் மோசடியான மோசமான கருத்தாகும்!

செயலாகும்! செய்தியாகும்! ஏனெனில், பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள்தான் சங்கராச்சாரியார் பற்றிய ஆதாரங்களையும், செப்பேடுகளையும், இலக்கியச் சான்றுகளையும், நாட்டு வழக்கிலிருந்த அனைத்துச் செய்திகளையும் சிதைத்துச் சீரழித்து ஒழித்து விட்டார்கள்.

**குறிப்பு**:- பல சங்கராச்சாரியார்கள் எழுதிய நூல்களையும், உரைகளையும் (பாஷ்யங்களையும்) ஒரே சங்கராச்சாரியார் எழுதியதாகக் கதைகட்டி விட்டிருக்கின்றார்கள். அதாவது பல கருவறைகளில் சிவநிலைப் பெற்றுச் சமாதியான பல்வேறு சித்தர்களையும், சித்தர் குலப் பெண்களையும் ஒரே சிவாம்சம், ஒரே சத்தி அம்சம் என்று கூறி வரலாற்றுக் குழப்பங்களையும், கருத்து மயக்கங்களையும், மெய்யான இந்துமத வரலாற்று இருட்டடிப்புகளையும் செய்தது போலத்தான் பல சங்கராச்சாரியார்களையும், பல ஆதிசங்கராச்சாரியார்களையும் ஒரே ஆதிசங்கராச்சாரியாராக உருவாக்கியுள்ளார்கள். இங்கு குருபாரம்பரியத்தில் அனாதிசங்கராச்சாரியார், ஆதிசங்கராச்சாரியார், பாதிசங்கராச்சாரியார், மீதிசங்கராச்சாரியார் என்று குறிக்கப் படுபவர்களையும் ஆராய வேண்டும்.

5) அத்வைத தத்துவத்துக்குரியவர் சங்கராச்சாரியார் எனப்படுவார். இப்படிப்பட்ட சங்கராச்சாரியார் இம் மண்ணில் இதுவரை 40 பேர்களுக்கு மேல் தோன்றி விட்டார்கள். இன்னும் தோன்ற வேண்டியவர்கள் எட்டுப் பேர்களே. இவர்கள் சிவனையே முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள்.

அதாவது, சீவன் நிலைபேறு பெற்றவர்கள் சித்தர்நெறிப்படி சிவன் என்று அழைக்கப் படுகிறார்கள். இந்த சிவன் என்ற பெரும் பொருள் அல்லது பரம்பொருள்தான் பரமாத்மா அல்லது பரம ஆன்மா என்று அழைக்கப்படுகிறது. இது ஆருயிர், ஆவி, ஆன்மா என்கின்ற மூன்றிற்கும் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும், முடிவிடமாகவும் இருக்கின்றது.

இதனை நினைக்கும் போது, பதினெண்சித்தர்கள்; "அண்ட பேரண்டங்கள் அனைத்தும் கடந்த பால்வெளியில் எங்கும் நிறைந்த அருவுருவ உயிர்ப் பொருளாக இருப்பதுதான் பரமான்மா. இதுவே 1008 சிவாலய அண்டங்களிலும், 243 சத்திபீட அண்டங்களிலும், 108 திருப்பதி அண்டங்களிலும்; ஓரணு உயிர் முதல் 150 ஆயிரம் (நூற்றைம்பது ஆயிரம் = ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) அணுக்களைக் கொண்ட மானுட உயிர்வரை வடிவப்பட்டு, வாழ்ந்து, தேய்ந்து, ஓய்ந்து, மாய்ந்து மீண்டும் அந்தப் பால்வெளியையே அடைகின்றது. எனவேதான் ஆன்மாவுக்குள் அண்டபேரண்டங்கள் கடந்த பரமான்மாவின் சத்தியும், பரமான்மாவின் ஆன்மாவும் இருக்கும் தத்துவம் கூறப்பட்டது".

இந்தத் தத்துவத்தைக் கூறுபவர்களே சங்கராச்சாரியார்கள். இவர்கள், மேற்படி தத்துவத்தின் விளக்கமாகவே 'உருவ வழிபாடு தேவையில்லை, அனைவருமே பரமான்மாவின் வடிவம், உலகப் பொருள்களும், இயக்கங்களும் மாயமே. அதாவது, அனைத்துமே பரமான்மாவில் தோன்றி பரமான்மாவில் முடிகின்றன' என்று கூறுகின்றார்கள். இந்தச் சங்கராச்சாரியார்கள் நான்கு யுகங்களிலும் தோன்றியுள்ளார்கள். இவர்களின் தத்துவம் பதினெண்சித்தர்களின் தத்துவமே. இவர்கள் பதினெண்சித்தர்களின் தத்துவ வித்துக்களே.

('13 வகை ஆச்சாரியார்கள் குருவழியாகத் தோன்றுபவர்கள் வேறு; கருவழியாகத் தோன்றுபவர்கள் வேறு' என்ற குருபாரம்பரிய கருத்தையும், '48 வகையான ஆச்சாரியார்கள் பதினெண் சித்தர்கள் மரபுப்படி தோன்றி வருகின்றார்கள்' என்ற குருபாரம்பரியச் செய்தியையும் தனித்தனியாக எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர, மேலே உள்ள எட்டு ஆச்சாரியார்களுடன் சேர்த்துக் குழப்பிக் கொள்ளக் கூடாது. விவரம் குருவழிக் காண்க.)

6) ஆதிசங்கராச்சாரியார் என்பவர்கள் பதினெண்சித்தர்கள் மரபுப்படி 'சத்தி வழிபாடு', 'தாய் வழிபாடு', 'அன்னை வழிபாடு', 'கன்னிப்

பூசை', 'ஏழு கன்னிகள் பூசை', 'ஒன்பது கன்னிகள் பூசை', 'தாந்தரீகப் பூசை', 'மாந்தரீகப் பூசை', 'ஏந்தரீகப் பூசை', 'சத்தி சிவ வழிபாடு' ... முதலிய பூசைகளைச் செய்பவர்களேயாவார்கள். இவர்களில் ஞானசித்தர்களும் தோன்றுவதுண்டு.

<u>**குறிப்பு**</u>:- இவர்களில் தோன்றும் ஞானசித்தர்கள் உலகியலுக்காகவாவது பெயரளவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதாவது, இல்லறத்தை ஏற்றவர்களாக இருக்க வேண்டும். அல்லது கூடுவிட்டுக் கூடு பாய்ந்தாவது, வேறு உடல்களிலிருந்து பெண்ணின்பத்தைத் துய்த்து பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குரிய இல்லற வாழ்வை ஏற்றவர்களாக ஆக வேண்டும்.

7) மேற்படி பதினெண்சித்தர்கள் நெறிப்படி தோன்றுகின்ற ஆதிசங்கராச்சாரியார்கள் தேவியை அதாவது சத்தியை வழிபடும் நெறிமுறைகளைத்தான் வலியுறுத்தி விளக்கிச் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட ஆதிசங்கராச்சாரியார்கள் இந்த நான்கு யுகங்களாக 32 பேர் தோன்றியிருக்கிறார்கள். இன்னும் தோன்ற வேண்டியவர்கள் 16 ஆதிசங்கராச்சாரியார்கள் உள்ளார்கள். இந்த ஆதிசங்கராச்சாரியார்கள் 16, 27, 32, 36, 48, 64, 82, 96, 108, 120 என்று பத்து வகையான வயதுகளை உடையவர்களாக இருப்பார்கள்.

<u>**குறிப்பு**</u>:- இன்றைக்கு நாட்டு நடப்பில் கூறப்படும் ஆதிசங்கராச்சாரியார் 'காலடி ஆதிசங்கரன்', 'தென்பாண்டித் தமிழன் ஆதிசங்கரன்', 'வெள்ளாடை மேனியான் ஆதிசங்கரன்', 'உச்சிக் குடுமியான் ஆதிசங்கரன்', 'கருணீக்க ஆதிசங்கரன்', 'சீர்காழி ஞானசம்பந்தன் வழித்தோன்றல் ஆதிசங்கரன்', 'ஞானசித்தன் ஆதிசங்கரன்', 'வடபுலத்து அருவுருவ அருளாட்சி அமைத்த தமிழ் அந்தணன் ஆதிசங்கரன்', 'மாந்தரீக சித்தியாளன் காலடி ஆதிசங்கரன்', 'தாந்தரீகவல்லி தமிழ் அந்தணன் ஆதிசங்கரன்' ... என்றெல்லாம் குருபாரம்பரியத்தில் குறிக்கப்படுபவரே யாவார்.

இவர் தமது 32வது வயதில் இமயமலையில் நீள்தவத்தில் ஆழ்ந்து ஒரு மண்டலப் பருவ பூசைகளை (48 மாதங்கள் = 4 ஆண்டுகள்) முறையாகச் செய்து நிறைவு பெற்று உடல் ஓரிடத்திலும், உயிர் வேறு இடத்திலுமாக பிறவாமைச் சித்தியும், இறவாயாக்கைச் சித்தியும் தமது 36வது வயதில் பெற்றிட்டார். இவரையே பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள், தங்களுடைய வடஆரிய வேதமதத்தின் ஆச்சாரியாராக ஏற்றுக் கொண்டிருக்கிறுர்கள்.

**<u>சிறப்புக் குறிப்பு</u>**:- இந்த பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் இதுவரை தோன்றியுள்ள 40 சங்கராச்சாரியார்களையும், 32 ஆதிசங்கராச்சாரியார்களையும் ஒன்றுக்கித்தான் அனைத்து வகையான தத்துவக் குழப்பங்களையும், சித்தாந்தக் குழப்பங்களையும், வேதாந்தக் குழப்பங்களையும், வரலாற்றுக் குழப்பங்களையும், ஆள் மாறுட்டங்களையும் செய்து உள்ளார்கள். இவர்களுக்கு மேலே குறிப்பிட்ட 72 ஆச்சாரியார்களும் (40 சங்கராச்சாரியார்கள் + 32 ஆதிசங்கராச்சாரியார்) பதினெண்சித்தர்கள் தோற்றிவித்த மெய்யான இந்துமதம் வாழ்ந்து வரும் 43,73,086 (1985இல்) ஆண்டுகளில் தோன்றியவர்களேயாவார்கள் என்ற பேருண்மை தெரியவில்லை! புரியவில்லை! தமிழினத்தைச் சார்ந்தவன்தான் 8 வகையான ஆச்சாரியார்களாக இருக்க முடியும் என்று குருபாரம்பரியம் கூறுகிறது. சித்தர் நெறிப்படி தோன்றும் சங்கராச்சாரியார்கள் பெண்ணின்பத்தைத் துய்த்தே தீர வேண்டும். எனவேதான், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி இன்றைக்கு இந்த ஆச்சாரியார்களைப் பற்றி விளக்க நேரிட்டது.

8) இதுவரை 40 சங்கராச்சாரியார்களும், 32 ஆதிசங்கராச்சாரியார்களும் தோன்றியிருக்கிறுர்கள் என்ற கருத்தை எதிர்க்கவோ! மறுக்கவோ! முற்படுபவர்கள் யாராக இருந்தாலும், வெளிப்படையாகக் கூறுகின்ற அளவுக்கு தமிழகத்துக்குள்ளேயே

20க்கும் மேற்பட்ட சங்கராச்சாரியார்களின் சமாதுகள் இருப்பதைத் தெரிந்தும், புரிந்தும் செயல்பட வேண்டும்.

**குறிப்பு**:- தமிழகத்திலுள்ள கோயில்களில் சங்கராச்சாரியார்கள் சிலைகள் உடைய இடங்களெல்லாம் சங்கராச்சாரியார்களின் சமாதுகளே. அருளுலகில் ஆச்சாரியார்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தியாளர்கள், சித்தர்கள், புத்தர்கள், தேவகுமாரர்கள், தேவதூதர்கள், ... முதலியவர்களே எல்லாம் அந்தந்த வகைக்கேற்ப ஒரே மாதிரியாகத்தான் முடி, உடை, உணவு, உடல், வாழ்வியல், ... முதலியவைகளைப் பெற்றிடுவார்கள் அல்லது அமைத்துக் கொள்ளுவார்கள் என்பதுதான் பதினெண்சித்தர்களின் குருபாரம்பரியச் செய்தி. எனவேதான், மேற்படி ஆச்சாரியார்களின் சமாதுகளில் மேலுள்ள சிலைகள் ஒரே மாதிரியான தோற்றத்தைப் பெற்றிருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டு வேண்டுமென்றால், இதுவரை தோன்றியுள்ள 32 புத்தர்களும், 27 தீர்த்தங்கரர்களும், 47 தேவகுமாரர்களும் (ஈசா = ஏசு), 48 நபிகளும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், ... ஒரே மாதிரியான தோற்றத்தைத்தான் அமைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதனைக் கூறிடலாம்.

9)

a) எனவே, அத்வைதத்திற்கு சங்கராச்சாரியார்களும், சித்தாந்தத்திற்கு ஆதிசங்கராச்சாரியார்களும் தனித்தனியாகத் தோன்றியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

b) உருவ வழிபாட்டைக் கண்டித்தவர்கள் சங்கராச்சாரியார்களே யாவார்கள், ஆதிசங்கராச்சாரியார்கள் அல்ல.

c) மாந்தரீக, தாந்தரீக, ஏந்தரீகப் பூசை செய்பவர்களெல்லாம் ஆதிசங்கராச்சாரியார்களே தவிர, சங்கராச்சாரியார்கள் அல்ல; இந்த இருவேறு வகைப்பட்டவர்களையும், பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் ஒன்றாக்கியதால்தான், உங்கள் கேள்வியில் குறிப்பிட்டுள்ள படி மயக்கங்களும், குழப்பங்களும், முரண்பாடுகளும்

நிறைந்தன. இன்றுள்ள சங்கராச்சாரியார்களிடம் தெளிவோ, முறையோ, நெறியோ, பூசாவிதியோ, வேதமோ, ... முழுமையாக இல்லாமல் இருப்பதற்குக் காரணமே இவர்கள் பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதத்தைப்** புரிந்து கொள்ளாமல் *பொய்யான ஹிந்துமதத்தில்* செயல்படுவதுதான். எனவேதான், எட்டுவகை ஆச்சாரியார்களைப் பற்றியும், 13 வகை ஆச்சாரியார்களைப் பற்றியும், 48 வகை ஆச்சாரியார்களைப் பற்றியும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியம், குருவாசகம், குருவாக்கு, குருவாக்கியம் என்னும் நான்கின் மூலம் விளக்கங்கள் கொடுக்கும் பணி துவக்கப் பட்டிருக்கிறது.

அனைத்தையும் முழுமையாக வெளியில் கூறக்கூடாது என்று கருவாணை, குருவாணை, தருவாணை, திருவாணை, அருளாணை, மருளாணை ஆகிய ஆறு ஆணைகளும் கண்டிப்பதால் மேற்கொண்டு விளக்கம் தேவைப்படுகிறவர்கள் நேரில் ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, குருதேவர், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களிடம் காண்க! குருவழிக் காண்க!

**<u>நகலெடுத்தவர்</u>:-**

சித்தரடியான், சித்தர் மகன்,
அருள்மிகு பசிய இளம்தலைகளை மாலையாக அணிந்த கபாலீசுவரி சன்னிதானம் சீ.மோகன்
S.Mohan B.Sc., B.Tech., Bhubaneswar, Orissa State.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: ஒரிசா சித்தரடியான் சீ.மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

---

# அருளுலக ஆட்சிமொழி

1983 அக்டோபர் மாத இதழ் 'இந்துமதம் அழைக்கிறது' என்ற பத்திரிகையில் திருமுருக கிருபானந்த வாரியார் பேட்டி ஒன்று வெளியிடப் பட்டிருந்தது. அதில்-

**ஆசிரியர்:-** *சமஸ்கிருதத்தில்தான் மந்திரங்கள் சொல்ல வேண்டும், தமிழில் சொல்லுவது அவ்வளவு சிறப்பானதல்ல என்பது பற்றி உங்களது கருத்து ...*

**வாரியார்:-** *சமஸ்கிருத மந்திரத்திற்குத்தான் சக்தி உண்டு. சமஸ்கிருதத்தில் சொல்லப்படுவது மந்திரம். தமிழில் மந்திரம் சொல்ல முடியாது. தமிழில் சொல்வது ஸ்தோத்திரம்.*

**ஆசிரியர்:-** *அப்படியானல் ஞானசம்பந்தர் தண்டமிழில் பாடி எலும்பைப் பெண்ணுருவாக்கினர் என்று சொல்லப்படுகிறதே! ஞானசம்பந்தருடைய தமிழ்ப்பாடலுக்கு மந்திர சக்தி இருந்திருக்கத்தானே வேண்டும்?*

**வாரியார்:-** *ஞானசம்பந்தரின் பாடலுக்கு அந்த ஆற்றல் இருந்தது என்று அர்த்தமில்லை. அவருடைய தவம், ஆன்மீக பலம், அதாவது அவருடைய தவசக்தியால் எலும்பு பெண்ணுருவாக ஆனதாகக் கொள்ள வேண்டும்.*

## இ.ம.இ. மற்றும் அ.வி.தி.யினர்கள் தரும் விளக்கம்:

இப்படிக் கிருபானந்த வாரியார் கூறியுள்ளார். ஆனல், தமிழில்தான் மந்திரம், மந்திறம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம் என்ற ஐந்தும் இருக்கின்றன. இந்த ஐந்தில் ஒன்ருன மந்திரம் மட்டும்தான் தமிழிலிருந்து சமசுக்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டும் (Translation), மொழித்திருத்தம் (Transliteration) செய்யப்பட்டும் உள்ளன.

ஆனால், <u>சமசுக்கிருதம் செத்தது போல் சமசுக்கிருத மந்திரங்களும் சத்தியின்றிச் செத்துப் போய்விட்டன</u>.

**<u>சான்று</u>:-** சமசுக்கிருத மந்திரம் சொல்லி அருள் வந்து ஆடுபவரே இல்லை. இருப்பதாகக் கூறினாலும் மிகச் சிலரே.

சமசுக்கிருத மந்திரம் சொல்லி எல்லாச் சடங்குகளும், பூசைகளும், ... செய்தாலும்; பேயைக் கூட சமசுக்கிருதத்தால் ஓட்ட முடியாது அநுபவத்தில். ... தமிழில் பூசை மந்திரங்கள் சொல்லும் உடுக்கை அடிக்கும் பூசாறிகள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். தமிழகத்தில் தமிழ்மொழி மந்திரங்களால் சத்தி, சித்தி, முத்திகள் பெற்று அருள்மிகு திருவிளையாடல் புரிபவர்களும் ஆயிரக் கணக்கில் உள்ளனர்.

தமிழில் சொல்லுவதை 'ஸ்தோத்திரம்' என்கிறார் வாரியார். தமிழில்தான் 'தோத்<u>திறம்</u>, தோத்<u>திரம்</u>, தோத்<u>தரம்</u>' என்ற மூன்று வகையான அருட்கலைகள் உள்ளன. இவை செயல்படச் 'சாத்<u>திறம்</u>, சாத்<u>திரம்</u>, சாத்<u>தரம்</u>' என்ற மூன்றும்; 'அத்<u>திறம்</u>, அத்<u>திரம்</u>, அத்<u>தரம்</u>' என்ற மூன்றும்; 'நேத்<u>திறம்</u>, நேத்<u>திரம்</u>, நேத்<u>தரம்</u>' என்ற மூன்றும்; 'சூத்<u>திறம்</u>, சூத்<u>திரம்</u>, சூத்<u>தரம்</u>' என்ற மூன்றும் உள்ளன. **"பன்னிரண்டு இராசிகள் போல் தோத்திறம் காக்கும் நூல்கள் கூட்டம் அமைந்துள்ளன"** - என்று குருபாரம்பரியம் சிறப்பிக்கிறது.

இவ்வளவு நுட்பதிட்பமான பிரிவுகளைத் தமிழ்ச் சாத்திறத் துறை பெற்றிருந்தும் தமிழில் உள்ள தோத்திரத்தின் மொழிபெயர்ப்பாகவும், மொழித் திருத்தமாகவும் உள்ள '*<u>ஸ்தோத்திரம்</u>*' ஒன்றை மட்டும் கிருபானந்த வாரியார் குறிப்பது வருந்தத் தக்கது.

**<u>குறிப்பு</u>**:- குருபாரம்பரியத்தில் உள்ள விளக்கம் -

"... தமிழில் உள்ள சூத்திற, சூத்திர, சூத்தரங்களை அடிப்படையாகக் கொண்டே சித்தர்கள் சமசுக்கிருதத்தில் '*சூக்தங்கள்*' என்ற பூசாவிதிகளை உருவாக்கினர். சித்தர்கள் சமசுக்கிருதத்தை வளப்படுத்தப் பெரிதும் முயன்று தமிழில் உள்ள சுருதிகளை அடிப்படையாகக் கொண்டு '*ஸ்மிருதி*'களை உருவாக்கினர். ஆனால் நான்மறை, நான்முறை,

நானெறி, நான்வேதம் என்பனவற்றில் நான்வேதம் என்பதை மட்டுமே சமசுக்கிருதத்தில் மொழிபெயர்ப்பும், மொழித்திருத்தமும் செய்தனர். அதுவும் முழுமையாக செய்ய முடியவில்லை.

'இருக்கு வேத'த்தை '*ரிக்வேதம்*' என்றும், 'அதர்வான வேத'த்தை '*அதர்வணவேதம்*' என்றும், 'யாமவேத'த்தை '*சாமவேதம்*' என்றும், 'அசுரவேத'த்தை '*யசுர்வேதம்*' என்றும் பெயரளவில்தான் அமைந்தன. எனவே, வடஆரியர்கள் தங்களுடைய எழுதாக்கிளவி மந்திரங்களை இந்த நான்கிலும் விருப்பம்போல் சேர்த்து அனைத்தும் பயனற்றுப் போகும்படிச் செய்துவிட்டனர். எனவேதான், சமசுக்கிருத வேதாகமங்களின்படி கட்டப்பட்ட கோயில்கள் அனைத்தும் அருளொளி இழந்து, இருண்டு, பாழ்பட்டுப் போயின.

சித்தர்கள் தமிழில் உள்ள மூன்று நேமங்கள், மூன்று நியமங்கள், மூன்று நிட்டைகள், மூன்று நிடதங்கள் எனும் பன்னிரண்டு உயிர்நூல்களில் இருந்து 'துணைநிடதம்' என்ற ஒன்றிலிருந்து மட்டும் முன்னூறு *உபநிடதங்களைச்* சமசுக்கிருதத்தில் எழுதினர். இதற்குள் வடஆரியருக்கும், தமிழருக்கும் போட்டி பொறாமைச் சண்டை சச்சரவுகள் முற்றிப் போரே மூண்டு விட்டது. எனவே, பிறமண்ணினரான 'பிறமணர்' எனும் வடஆரியரை எதிர்ப்பதற்காகச் சித்தர்கள் தாங்கள் சமசுக்கிருத மொழிக்குச் செய்த தொண்டை நிறுத்திக் கொண்டனர். அதனால், நிடதங்களும், இணை நிடதங்களும் கூடச் சமசுக்கிருத மொழியில் உருவாக்கப்படவில்லை.

பிறமண்ணினரான 'பிறமணர்' தமிழைப் பழித்தும், இழித்தும், எதிர்த்தும் செயல்பட்டிட்ட போதும் அவர்களை அழித்தொழிக்க எண்ணவில்லை சித்தர்கள். சித்தர்களால் ஈன்றெடுக்கப்பட்ட குறைமாதக் குழந்தையே '*சமசுக்கிருதம்*'. இது செத்தும் கூடத் தமிழைக் கெடுக்கிறது என்பதால் தமிழைப் பாதுகாக்கப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி பெருமுயற்சிகள் செய்து,

1. கருவாக்கு, 2. கருவாசகம், 3. குருவாக்கு, 4. குருவாசகம், 5. தருவாக்கு, 6. தருவாசகம், 7. திருவாக்கு, 8. திருவாசகம், 9. அருள்வாக்கு, 10. அருள்வாசகம், 11. மருள்வாக்கு, 12. மருள்வாசகம், 13. அரசபாரம்பரியம், 14. இலக்கியபாரம்பரியம், 15. குருபாரம்பரியம், 16. பூசாவிதிகள், 17. கருவறை மரபுகள், 18. குருமார் ஒழுகலாறு எனும் பதினெட்டுப்படிகளை உருவாக்கினார்.

**பாரே புகழும் பதினெட்டாம்படிகளைப் படைத்துப் பைந்தமிழர் காத்தார் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார்."**

**- குருபாரம்பரிய வாசகம்**

இன்றைக்குப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகப் பொறுப்பேற்று பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும் முறையாக நிறைவு செய்து; இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் நாடெங்கும் யாகசாலைகள், வேள்விச் சாலைகள், தவச் சாலைகள், சத்திச் சாலைகள், முத்திச் சோலைகள், குருகுலங்கள், ... உருவாக்கித் தமிழ் மந்திரங்களில் வல்லமை பெற்ற அருளாளர்களை உருவாக்கி அருட்பணி விரிவாக்கத் திட்டம் செயல்படச் செய்கிறார்.

கோயில்கள் புத்துயிர்ப்பு, தனிமனிதர் அருளுலகப் பயிற்சி பெறல், பொதுமக்கள் அருளை அநுபவப் பொருளாகப் பெற்றுத் தீமைகளையும், கேடுகளையும், நலிவுகளையும் போக்கிக் கொள்ளல் ... முதலியவை நடைபெறுகின்றன.

இந்தக் காலக்கட்டத்தில் 'தமிழில் மந்திரம் இல்லை' என்று சொல்லுபவர்; குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூராரின் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் தமிழகம் எங்கும் நூற்றுக்

கணக்கான மக்கள் தமிழ்மொழி மந்திரங்களால் அருள்நலம் பெற்றுச் செல்வதை நேரில் கண்டு தெளிவு பெறலாம்.

நல்லது! ஞானசம்பந்தருக்குத் தவவலிமையையும், ஆன்மீக பலத்தையும் நல்கியது எது? **தமிழ்மொழிதானே**! <u>அவர் சமசுக்கிருத மொழியிலா பூசை செய்தார்</u>?

தேவி பார்வதியின் உண்ணுமுலைப் பாலைக் குடித்ததும், அருட்சத்தியைப் பெற்ற ஞானசம்பந்தர் **சமசுக்கிருத மொழியில் பாடவில்லையே! தமிழில்தானே பாடினார்!**

சிவபெருமான் அறுபத்துநான்கு முறை நேரில் தோன்றித் **திருவிளையாடல் புரிந்தது தமிழ்மொழியில்தானே**!

"*சமசுக்கிருத மொழி மந்திரத்துக்குத்தான் சத்தி உண்டு*" என்றால் அறுபத்து மூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், சந்தானக் குரவர்களும், பட்டினத்தார், பத்திரகிரியார், தாயுமானவர், அருணகிரியார், அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார் முதலியோர்களும் தமிழ்மொழி மந்திரங்களால்தான் சத்தி, சித்தி, முத்தி பெற்றார்கள் என்பது உண்மையா? பொய்யா?

------------------------------

# <u>சிறப்புக் குறிப்பு</u>

{சித்தர்களின் நூல்களிலிருந்தும், நடைமுறைகளிலிருந்தும் திரட்டப்பட்ட கருத்துக்களால் உருவானதே இச்சிறப்புக் குறிப்பு.

**<u>அருளியவர்:</u> குருமகாசன்னிதானம்**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**}

பதினெண்சித்தர்கள் இந்த உலகுக்கு கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலேயே பல ஆய்வுகளை நிகழ்த்த விண்வெளியிலிருந்து வந்தனர். அவர்கள் தங்களின் தாய்மொழியான தமிழ்மொழியில்தான் முதன்முதலில் பயிரினங்களும், உயிரினங்களும் உய்யும் பொருட்டு

இந்துமதத்தைப் படைத்தனர். தமிழ்மொழியில் விண்ணையும் மண்ணையும் இணைத்துப் பயிரின உயிரின வாழ்வில் நலம் விளைவிக்கும் அருள்சார்ந்த கலைகளும், அறிவியல்களும் கணக்கற்றுப் படைக்கப்பட்டன. பிறகு, சித்தர்கள் தேவைக்கேற்ப உலகெங்கும் பல மொழிகளைப் படைத்துக் கொடுத்தனர்.

எனவே,

**'எல்லா மொழிகளுமே மதத்துக்குரியவையே',**

**'எல்லா மொழிகளுமே பத்தி, சத்தி, சித்தி, முத்தி வழங்கக் கூடியவையே',**

**'எந்த ஒரு மொழியும் அருட்சத்தி இல்லாத மொழி அல்லது பூசைக்குப் பயன்படாத மொழி என்று கருதுவது தவறு.'**

... என்பனவே பதினெண்சித்தர்களின் மொழிக் கொள்கை.

அதாவது, **'எல்லா மொழிகளுமே சமமானவையே! சத்தானவையே! சித்திக்குரியவையே!'** என்ற <u>குருபாரம்பரிய வாசகமே</u> இதுகாறும் கூறியவற்றின் சுருக்க விளக்கம்.

இந்த உலகிலுள்ள எல்லா வழிபாட்டு நிலையங்களுக்கும் உரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து முறைப்படி அவற்றை 'அருள் ஊற்றுக்களாக' அமைத்தவர்கள் பதினெண்சித்தர்களே! எனவே, **<u>"... அந்தந்த வழிபாட்டு நிலைய வட்டாரத்தில் பேசப்படும் மொழியே 'பூசைமொழியாக', 'கருவறை மொழியாக', 'அருட்சினை மொழியாக', 'அருள்வழங்கு மொழியாக', 'கடவுளையும், மனிதனையும் இணைக்கும் மொழியாக', ... வல்லமையோடு விளங்கிடும் வண்ணமே பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், இவர்களின் விந்துவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் காலங்கள் தோறும் மொழிகளைப் படைத்துச் சமயநெறியை காத்து வருகிறார்கள். அனைத்து மொழிகளும், சமயங்களும் சித்தர்நெறி எனும் கனிமலர்ச் சோலையிலே காய்த்தவைதான், பூத்தவைதான். மொழியாலோ, மதத்தாலோ மனித இனம் வேறுபடலோ! மாறுபடலோ! கூறுபடலோ! போரிட்டு மடிதலோ!</u>**

**<u>... தவறு! தவறு! தவறு! இம்மண்ணுலகில் ‘சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ உருவாக்கவே சித்தர்கள் மொழியையும், மதத்தையும் படைத்தனர்...”</u>** என்ற **‘குருபாரம்பரிய வாசகம்’** இங்கே குறிக்கப் படுவதுதான் சிறப்பு.

**குருதேவர், தலைவர், ஞானத்தந்தை,**
**குருமகாசன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்**

# <u>பதிப்பிப்போர் கருத்துரை</u>

சித்தர்நெறி ஆர்வலர்களும், இ.ம.இ. உறுப்பினர்களும், அ.வி.தி. உறுப்பினர்களும் கிருபானந்த வாரியாரின் தவறான கருத்துக்குக் குருதேவர் வழங்கிய பதிலை எந்த ஏடும் வெளியிட முன்வராததால் இந்த அறிக்கையை அச்சிட்டு நாடெங்கும் வழங்க நேரிட்டது.

தமிழைத் தாழ்த்தியும், பழித்தும் கூறுகின்ற கிருபானந்த வாரியாரின் பேட்டியை வெளியிடத் தமிழில் ஏடுகள் இருக்கின்றன. ஆனால், தமிழின் உரிமையையும், பெருமையையும், பேராற்றலையும், பழம்பெரும் வரலாற்றையும்... மிகத் தெளிவாகச் சான்றுகளுடனும் ஊன்றுகளுடனும் எடுத்துக் கூறுகின்ற குருதேவரின் கருத்துக்களை வெளியிட நாளேடுகளோ! வார ஏடுகளோ! பிற பதிப்பகங்களோ! ... முன்வரவில்லை என்பதால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினரும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தினரும், சித்தர்நெறி ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் **தமிழுக்கு ஏற்பட்டுள்ள பழிநிலையை, அழிநிலையை** விளக்கிடப் பணியாற்ற முன்வந்துள்ளோம்.

**<u>தமிழுக்குத் தமிழகத்திலேயே இப்படிப்பட்ட இகழ்ச்சி நிலைகள், தாழ்ச்சி நிலைகள், வீழ்ச்சி நிலைகள்...</u>** மிகுந்திருப்பதை உண்மையான தமிழ்ப் பற்றுள்ளவர்களாவது உணர வேண்டும்.

தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும் உடைய உண்மையான தமிழர்களே! விழிச்சி பெறுங்கள்! எழுச்சி பெறுங்கள்! தமிழ்காக்க எங்களோடு செயல்பட வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்! - என்ற அறைகூவலை இந்த அறிக்கை வாயிலாக விடுக்கின்றோம்.

அந்தந்த வட்டாரத்தார் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப இந்த அறிக்கையைச் சில ஆயிரம் நகல்களாவது அச்சடித்துப் படித்தவர்க்கும் படிக்கின்றவர்க்கும் வழங்கிப் பைந்தமிழ் காக்கும் பணியினைச் சிறப்பியுங்கள். ஏனெனில்,:-

**“தமிழின் தாழ்ச்சியே தமிழின வீழ்ச்சி”**
**“தமிழின வீழ்ச்சியே இந்துமத வீழ்ச்சி”**
**“தமிழுணர்ச்சியே இந்துமதச் செழுச்சி”**
**“தமிழே இந்தியப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் உயிர்”**
**“தமிழே இந்திய வரலாற்றுக்கு ஊன்று, சான்று”**

எனவே, ‘தமிழனே தமிழைப் பழிக்கும் இழிநிலையை மாற்றப் போராடும் உணர்வு தழைக்க உழைப்போம்! வாரீர்! வாரீர்! வாரீர்!’ என்று வேண்டுகிறோம்.

தமிழைச் சொல்லியே வாழ்ந்த, வளர்ந்த, வளரும், வாழும் கழகங்களும், தனிமனிதர்களும், பிற அமைப்புக்களும் இருக்கின்ற நமது செந்தமிழ் நாட்டில் யாருமே தமிழ் இழித்துரைக்கப் பட்டதற்குக் கொதித்து எழவில்லை. எவரும் பொறுப்பாகப் பதிலுரைக்கவில்லை. மேலும், “தமிழ் வாழ்க!, சைவம் வாழ்க!” என்ற முழக்கத்தையே உள்ளீடாகக் கொண்ட சைவமடங்களும், பீடங்களும் உள்ள தெய்வத் தமிழ்நாட்டில் யாருமே தமிழின் மானங் காக்க உரிமைக்குரல் எழுப்பவில்லை.

இந்த மோசமான, மோசடியான, நாசகாரக் காலக்கட்டத்தில்தான் இ.ம.இ.யும், அ.வி.தி.யும், சித்தர்நெறி ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் தமிழின் உரிமையையும், பெருமையையும் காக்க முன்வந்துள்ளனர் என்பதை இனியாவது தமிழகத்து மக்கள் புரிந்து,

சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

இங்ஙனம்

**சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், சித்தர்நெறி ஆர்வலர்கள், சித்தர்நெறி ஆதரவாளர்கள்.**

**<u>நகலெடுத்தவர்:</u>**

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம்,
ஆத்தாள் தேவி ஆதிபராசத்தி ஆதீனம்,
எட்டுத் திருக்கரங்களும் இயங்க சுடலையில் திருநடனமிடும் ஆத்தாள்தேவி கபாலீசுவரி பீடம்,
திருவேங்கட மலையாளும் ஏழுமலையான் தம்பிரான்,
அனாதிகால சங்கராச்சாரியார் அமளிகை,
ஆதிகால பிறம்மஞுச்சாரியார் திருவடி,
மதுரைப் பாண்டி முனீசுவரர் அருளாளி,
சித்தரடியார் ஏ. இரவி,
செங்கை மாவட்டம்-601201

**//உண்மை நகல்//**

**/இதன் மூலநகல்: சித்தரடியார் ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது./**

---

# இ.ம.இ. கொள்கை விளக்கப் பாடல்

**சரணம்**

பிறமண்ணினர் மதமே வேத மதமாகும்! இதைப்
பிரித்துக் கூறல் எப்படிப் பேதமாகும்!
ஆஆஆ ஆஆஆ ஆஆஆ ஆஆஆ ஆஆஆ
*(மீண்டும் சரணம்)*

**பல்லவி**

பதினெண்சித்தர் நெறியே இந்துமதமாகும்!
ஆஆஆ ஆஆஆ ஆஆஆ
அஉஓம் அஉஓம் அஉஓம்
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும்! - இதுவே
ஆவி ஆன்மா ஆருயிர் பெறும் விளக்கமாகும்!
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும்!
இந்துமதமாகும்! இந்துமதமாகும்! இந்துமதமாகும்! - இந்த
இந்துமதமே இம்மண்ணின் மூத்த தமிழின மதமாகும்
இம்மண்ணின் மூத்த தமிழின மதமே இந்துமதமாகும்!
அஉஓம் அஉஓம் அஉஓம் அஉஓம் அஉஓம்
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும்! - இதுவே
ஆவி ஆன்மா ஆருயிர் பெறும் விளக்கமாகும்!
இந்துமதமே சீவநெறியெனும் சிவநெறியாகும்! - அதுவே
திராவிடரின் சைவநெறியாகும்! திராவிடரின்
சைவநெறியாகும்! திராவிடரின் சைவநெறியாகும்!
இந்துமதமே திராவிடரின் சிவநெறியான சைவ சமயமாகும்!
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும்!
அஉஓம் அஉஓம் அஉஓம் அஉஓம் அஉஓம்
இந்த மண்ணுலகின் முதல் மதமே இந்துமதமாகும்! - அதுவே

மதத் தத்துவங்களின் மூலமாகும்! முதலாகும்! தாயாகும்!
எந்த மதமும் சொந்தமாகிடும் இந்த இந்துமதத்துக்கே!
பதினெண்சித்தர் நெறியே இந்துமதமாகும்! - இதுவே
செந்தமிழரின் சொந்த மதமாகும்! சொந்த மதமாகும்!
சொந்த மதமாகும்!
பிறந்தோரை யெல்லாம் ஒன்ருக எண்ணும் மதமே இந்துமதம்!
பிறந்தோருக்குள்ளே பேதங்களே வளர்க்கும் மதமே
வேதமதம் - இதைப்
பிரித்துக் கூறல் எப்படிப் பேதமாகும்? பேதமாகும்? பேதமாகும்?
பிறமண்ணினர் மதமே வேதமதமாகும் - இதைப்
பிரித்துக் கூறல் எப்படிப் பேதமாகும்? எப்படிப் பேதமாகும்?
எப்படிப் பேதமாகும்?
ஆஆஆ ஆஆஆ ஆஆஆ ஆஆஆ ஆஆஆ
அஅஅ அஅஅ அஅஅ அஅஅ அஅஅ
உஉஉ உஉஉ உஉஉ உஉஉ உஉஉ
மமம மமம மமம மமம மமம
அஉம அஉம அஉம அஉம அஉம
அகர உகர மகர அகர உகர மகர அகர உகர மகர
அகர உகர மகர அகர உகர மகர
ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம்
இந்த மண்ணுலகின் முதல் மதமே மூலமதமே
மூத்த மதமே இந்துமதமாகும்!

<u>**குறிப்பு**</u>:-

இப்பாடல் முதல் விசயாலயன் எனப்படும் வெற்றித் திருமகன் காலத்தில் பாடப் பட்ட பாட்டு. பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் எழுதப் பட்டிருக்கலாம் என்று கருதப் படுகிறது.

**//உண்மை நகல்//**

**//மூலம்: குருதேவர் அறிக்கை எண் 50இல் 5ஆம் பக்கம்//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

* **ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

## சித்துக்களனைத்தும் தனித்தனி கடந்தோர் சித்தர்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com